# செப்டம்பர் 14 - திருச்சிலுவையின் மகிமை விழா

## திருப்பலி முன்னுரை

இனியவர்களே! திருச்சிலுவையின் மகிமைப் பெருவிழாவை கொண்டாடுகின்றோம்.

யூதர்கள் அரும் அடையாளங்களையும், கிரேக்கர்கள் ஞானத்தையும் நாட, நாங்களோ சிலுவையில் அறையுண்ட இயேசுவை அறிக்கை செய்வதில் அக்கறை காட்டுகின்றோம் என்று பவுல் அடிகளார் கூறுகின்றார்.

இயேசுவே சிலுவையை சுமந்ததால், அவமானத்தின் சின்னமான சிலுவை மகிமைப் பெற்றது. இச்சிலுவையை தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றுகின்றவனே என்னுடைய சீடன் என்ற தகுதியைப் பெறுகின்றார் என்கின்றார்.

வாழ்வின் எந்த நிலையையும் மாற்றியமைக்க இறைவனால் முடியும். எனவே நம்முடைய இன்ப துன்பமான நிலையை அவருடைய பாதத்தில் ஒப்புக் கொடுத்து, நம்பிக்கை கொள்வோமேயானால், அன்றாட வாழ்வின் சிலுவையை நம்பிக்கையோடு எடுத்துச் செல்ல முன்வருவோமேயானால், அவர் நம்பிக்கைக்குரியவர், அழுகையின் முக்காட்டை மாற்றி, மகிழ்ச்சியால் நம்மை நிரப்புவார். பக்தியுடனே பலியிலே பங்கேற்று செபிப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

சிலுவையில் அறையுண்ட மெசியா! திருஅவை அன்பர்கள் தங்களது பணிவாழ்வில் சந்திக்கின்ற சிலுவைகளை அன்றாடம் சுமந்து உம்மை பின்செல்ல அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

சிலுவையில் அறையுண்ட மெசியா! நாட்டை ஆள்வோர், மக்களின் மீது சிலுவைகளை சுமத்தாமல், அன்றாட வாழ்வில், மக்கள் சுமக்கும் சிலுவைகளை இறக்கி வைக்க துணைநிற்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

சிலுவையில் அறையுண்ட மெசியா! பலியிலே பங்கேற்கும் நாங்கள், எங்களது சிலுவைகளை மட்டும் பாராமல், மற்றவர்களது சுமைகளை இறக்கி வைக்க துணை நிற்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

சிலுவையில் அறையுண்ட மெசியா! சிலுவையை உற்று நோக்கும் நாங்கள், எங்களுக்கு மீட்பு தந்த உம்மை மட்டுமே, வணங்கி, வழிபட்டு, ஆராதிக்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

சிலுவையில் அறையுண்ட மெசியா! தங்களது துறவற சபை நாம விழாவையும், தங்களது பெயர் கொண்ட திருநாளையும், கொண்டாடும்

அன்பர்கள் திருச்சிலுவையின் மகிமையை எடுத்து சொல்லும் விதத்தில் வாழ அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com